சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2021

29.01.2026

பி.வா.சா.3 திரு. குணசேகரன், த/பெ. பரமசிவம்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் வாணியத்தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு பூர்வீகம் திருவிடைவாசல் கிராமம் ஆகும். குருமூர்த்திக்கு பிறந்த ஊர் திருவிடைவாசல். குருமூர்த்தி பிறந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது பெற்றோர் சொல்லிதான் தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணத்தை பார்த்தால் தான் சொத்து யாருக்கு சொந்தம் என்று சொல்லமுடியும் என்றால் சரிதான். ஆனால் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு திருவிடைவாசலில் கோபாலகிருஷ்ணன் கிராம நிர்வாக அலுவலராக இருந்த போது வருவாய் ஆவணங்களை பார்த்தேன் எந்த சர்வே எண்ணுக்கு எந்த ஆவணங்களை பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக எந்த விவரமும் தெரியாமல் குருமூர்த்தி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.